தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1981 ஆகஸ்ட் 31

ஆவணி 15, துன்மதி—திருவள்ளுவர் 2012

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவைக் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''இன்றியமையாச் சிறப்பின ஆயினும்

குன்ற வருப விடல்.''

இன்றியமையாத சிறந்த செயல்களே ஆயினும் அவற்றால் ஒருவனுடைய நாட்டின் சிறப்புக்கு குறை உண்டாகுமானால் அந்தச் செயல்களை அவன் செய்தல் கூடாது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

சின்னமுட்டத்தில் மீன்பிடி துறைமுகம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 101—திரு. சு. முத்துகிருஷ்ணன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குமரி மாவட்டத்தில் சின்னமுட்டத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டத்திற்கு ஆன முதலீடு ரூபாய் எவ்வளவு?

(ஆ) மத்திய அரசு இதற்கான அனுமதி வழங்கிவிட்டதா?

(இ) இதன் மூலம் ஆண்டுக்கு எவ்வளவு மதிப்பீடு உள்ள மீன்கள் கிடைக்கும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) குமரி மாவட்டத்தில் சின்னமுட்டத்தில் மீன்பிடிக்கும் துறைமுகம் அமைக்கும் திட்டத்திற்கு ரூ. 278.00 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) இத் திட்டத்திற்கான மத்திய அரசின் அனுமதி இன்னும் வழங்கவில்லை.

(இ) இத் துறைமுகத்தை முழுமையாக மீனவர்கள் பயன் படுத்துவார்களேயானால் படிப்படியாக ஆண்டுதோறும் அதிகரித்து ஐந்தாவது ஆண்டிலிருந்து ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 857,00 இலட்சம் மதிப்புள்ள 34,000 டன் மீன்கள் இத்துறை முகத்தினைப் பயன்படுத்துபவர்களால் பிடிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் சின்ன முட்டத்தில் ரூபாய் 2 கோடிக்கு அதிகமான செலவில் மீன்பிடித் துறைமுகம் கட்டுவதிலே அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கையை நான் பாராட்டி அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதிகப்படியாகக் மீன் கிடைக்கின்ற பூதத்றை, எரேமியன்துறை, போன்ற இடங்களில் இப்படிப்பட்ட திட்டத்தை அமுலாக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய செயற்குறிப்புக்கள் இல்லை. மேலும், இந்தத் திட்டத்தை நிறைவேற்றி முடித்ததற்குப் பிறகுதான் மற்ற திட்டங்களைப் பற்றி ஆலோசிக்க வேண்டிவரும். அப்போது மத்திய அரசுடன் கலந்து ஆவன செய்யப்படும்.

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகம் கட்டுவதால் கிடைக்கும் பலன் என்ன? மத்திய அரசின் அனுமதியை உடனடியாகப் பெறுகின்ற வகையிலே மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அங்கே துறைமுகம் கட்டுவதற்கான அளவுக்கு மதிப்பீடுகளும், வரைப்படங்களும் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் அந்தத் திட்டம் வேலை செய்யத் தொடங்கும். 2 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அந்தத் திட்டத்தை செயல்படுத்தினாலும் சிறிய துறைமுகங்களை அதனதன் தேவையினைக் கருதி மாநில அரசு அவற்றை ஏற்றுக்கொள்ளும். மத்திய அரசு ஏற்றுக்கொண்டபின் இந்தத் திட்டத்தைத் துவங்க வேண்டும் என்பதற்கு அடையாளமாகத்தான் தமிழக அரசு ஆயிரம் ரூபாயினை மாநில நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கி இருக்கின்றது.

அந்தத் துறைமுகம் கட்டி முடிக்கப்படுமேயானால் அதன்மூலம் 34,000 டன் மீன்கள் அந்தத் துறைமுகத்தினைப் பயன்படுத்துபவர்களால் பிடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றை நாம் விற்றால் அதன் மூலம் 8 கோடியே 57 இலட்சம் ரூபாய் கிடைக்கும்.

மன்னார் வளைகுடாப் பகுதியில் செயற்கை முத்து உற்பத்தி செய்யும் திட்டம்.

*வினா எண். 102—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மன்னார் வளைகுடாவில் வணிக அடிப்படையில் செயற்கை முத்து உற்பத்திக்கான திட்டம் அரசிடம் உள்ளதா?